# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
# அசல் வழக்கு எண்.150/2022

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.03.2026 | | |
| பெயர்: | நேதாஜி (PW1– Cross continuation) | தகப்பனார் பெயர்: | சொக்கலிங்கம் |
| கிராமம்: | மாதிரவேளூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 67/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 18.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.35)**

1. தாவா சொத்தைப் பொறுத்து நானும், எனது சகோதரிகளும் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் 2012 ம் வருடம் பிரதிவாதிகளிடம் அடமானம் வைத்தேன். 2012ம் வருடத்திலிருந்து தற்சமயம் வரை தாவா சொத்து பிரதிவாதிகளிடம் உள்ளது என்றால் சரிதான். 2012 ம் வருடத்திற்கு முன்பு நான் தாவா சொத்தை சாகுபடி செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. என்னிடம் காட்டப்படும் கடந்த 24.06.1997 தேதியிட்ட ஆவணத்தில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. நான் பத்திரமே எழுதி தரவில்லை. நான் 2012ம் வருடத்திற்கு முன்பு சுமார் 12 வருடங்களாக தாவா சொத்தில் சாகுபடி செய்து வந்தேன். நான் கடந்த 1997 ம் வருடம் பிரதிவாதிகளின் தகப்பனார் குஞ்சுதாஸ் அவர்களிடம் தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டேன் என்றாலும், அதுமுதல் தாவா சொத்தில் நான் சாகுபடி

செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் அடமானம் தான் வைத்தேன். பிரதிவாதியின் தந்தையிடம் வாய்மொழியாக அடமானம் வைக்கப்பட்டது.

3. தாவா சொத்தை பிரதிவாதிகள் கிரயம் செய்து தர கடந்த 2022 ம் வருடம் வலியுறுத்தியதால் தான் அவர்களுக்கு எதிராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கொண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.47)**